**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 112 /2018**

**PW 7**

| | | |
|---|---|---|
| Name | : | மரு. அருண் |
| Father's/Husband's Name | : | பழனிச்சாமி |
| Village | : | |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.02.2025.

**A1 - A2 present.**

**முதல் விசாரணை -**

(1)நான் தற்போது கோயம்புத்துார் மாவட்டம் , மதுக்கரை அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நல மருத்துவராக பணி செய்து வருகிறேன் . நான் இதற்கு முன்னர் 2016 ம் வருடம் திருவண்ணாமலை அரசு மருத்துவ கல்லுாரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணி செய்தேன். அப்போது 27.05.2016 ம் தேதியன்று இரவு 9.00 மணியளவில் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது பள்ளத்தெரு , நாரியமங்கலத்தை சேர்ந்த செல்வம் வயது 40 த/பெ. பெரியதம்பி என்பவரை அவரது மனைவி மணிமேகலை என்பவர் சிகிச்சைக்கு ஆஜர்படுத்தினார் . நான் நோயாளியை பார்த்தபோது சுய நினைவின்றி இருந்தார். அவர் மனைவி என்னிடம் தன் கணவரை தெரிந்த 2 ஆண் நபர்கள் கொடுவாள், மற்றும் கற்களால் அதே தினம் மாலை 7.00 மணிக்கு பள்ளத்தெருவில் தாக்கியதாக சொன்னார்.

(2) நோயாளியை பரிசோதித்தபோது கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1) இடது பக்க தலையில் 1 x 1 x 1 அளவிலான வெட்டுக்காயம் காணப்பட்டது.

2) வலது பக்க கன்னத்தில் 2 x 2 செமீ அளவில் வீக்கக்காயம் காணப்பட்டது.

3) இடது காதில் வெட்டுக்காயம் 2 x 2 x 1 செமீ அளவில் காணப்பட்டது.

அவருக்கு தேவையான முதலுதவிகள் செய்து தீவிர சிசிச்சை பிரிவில் உள் நோயாளியாக அனுமதித்தேன். நான் அவருக்கு வழங்கிய விபத்து பதிவேட்டு நகல் அ.த.சா.ஆ.8. மேற்சொன்ன காயங்கள் கொடுவாள், கற்கள் போன்ற ஆயுதங்களால் தாக்கினால் ஏற்பட வாய்ப்புள்ளது . இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை -</u>

(1) நான் எனது விபத்து பதிவேட்டு நகலில் வெட்டுக்காயம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். Lacerated injury என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சிதைந்த காயம் கூர்மையான ஆயுதத்தால் வெட்டினால் ஏற்பட வாய்ப்பில்லை என்று சொன்னால் சரிதான் . மேலே குறிப்பிட்ட 3 காயங்கள் தவிர வேறு காயங்களை நான் பார்க்கவில்லை . தண்ணீர் பிடிப்பதற்காக தோண்டப்பட்ட குழியில் ஒரு நபர் விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் இல்லை. மதுபோதையில் இருக்கும் ஒரு நபர் கூர்மையான கற்கள் நிறைந்த பகுதியில் விழுந்தால் நான் குறிப்பிட்ட காயங்கள் போல் ஏற்பட வாய்ப்புள்ளது.

(2) என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் எங்கள் மருத்துவமனையில் 27.05.2016 ம் தேதியன்று இரவு 9.10 மணியளவில் வாசுகி க/பெ. பொன்னுசாமி நாரியமங்கலம் கிராமம், கீழ்பென்னாத்தூர் அஞ்சல் , திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் சிகிச்சைக்காக வந்ததாக உள்ளது என்றால் சரிதான் . சீரியல் நெம்பர் 0126848 பதிவெண்ட கொண்ட விபத்து பதிவேட்டு நகல் என்னால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அவரை தெரிந்த ஒரு ஆண் நபர் 27.05.2016 ம் தேதியன்று மாலை 7.00 மணியளவில் அவர் வீட்டின் முன்பு கற்களால் தாக்கப்பட்டதாக சொல்லி சிகிச்சைக்கு வந்துள்ளார் என்றால் சரிதான்.

(3) அவருக்கு தலையின் இடதுபக்கத்தில் 4 x 1 x 0.5 செமீ அளவில் கிழிந்த காயம் காணப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான் . அவருக்கு முதலுதவி வழங்கப்பட்டு உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான் . அவருக்கு ஏற்பட்ட காயங்கள் அவர் சொன்னவிதத்தில் தாக்கப்பட்டிருந்தால் ஏற்பட

வாய்ப்பு உள்ளது . இந்த விபத்து பதிவேட்டு நகல் என்னால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் . **அது எ .சா.ஆ.1.** மேற்படி நோயாளி சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டது பற்றி காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

**<u>அனுமதியுடன் அரசு தரப்பு மறு விசாரணை</u>**

ஒரு நபர் கரடு முரடான பாதையில் தப்பித்து ஓடி கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது . மேற்படி நபர் எப்போது மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்று கேட்டால் 28.05.2016 ம் தேதியன்று மருத்துவமனையில் சொல்லாமல் வெளியேறியுள்ளார்.

**<u>கூடுதல் குறுக்கு விசாரணை</u>** - இல்லை.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.